## THE LABOUR COURT, SALEM
## C.P.No. 79 of 2019

**RW1 சந்திரசேகரன் மீண்டும் வரவழக்கைப்பட்டு மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

மனுதாரரின் அடிப்படை சம்பளம் ரூ. 15,365/– என்றால் சரியல்ல. அவருடைய அடிப்படை சம்பளம் ரூ. 15,140/– ஆகும். மனுதாரருக்கு 01.08.2013 அன்று 5 வது ஆய்வு வழங்கியுள்ளோம். வழங்கிய ஆய்வை நீக்கி விட்டு புதியதாக சம்பளம் வழங்கியது என்றால் சரியல்ல. 01.09.2010 ல் 12 (3) ஒப்பந்தப்படி அடிப்படை சம்பளம் ரூ.12,245/– , தர ஊதியம் ரூ.4,300/– மொத்தம் ரூ.16,545/– என்றால் சரிதான்.

30.04.2016 பணி ஓய்வு பெறும் போது அவரின் அடிப்படை சம்பளம் ரூ. 15,365/–, தர ஊதியம் ரூ. 4,300/– ஆகும். 119% அகவிலைப்படியை தாண்டி நாங்கள் கொடுக்கவில்லை. அரசாணை எண் 142 ல் அந்த அரசாணை பிறப்பித்த தேதியில் அதற்கு முன்பு எவ்வளவு அகவிலைப்படி கொடுத்தோமோ, அதே அகவிலைப்படியை தொடர்ந்து கொடுக்க உத்தரவாகியதை எதிர்த்து சிலர் பல தொழிலாளர்களும், தொழிற்சங்கமும் உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை தாக்கல் செய்து அரசாணை 142 செல்லாது என்று வலியுறுத்தினார்கள். தற்போது அரசாணை 142 ஒரு பகுதி மாற்றம் செய்து மற்ற பகுதி செல்லாது இன்று நீதிமன்றத்தில் நான் தெரிந்துக்கொண்டேன். அரசாங்கமும் 1 ஆம் எதிர்மனுதாரரும் எடுக்கின்ற முடிவை பொறுத்து மனுதாரருக்கு கிடைக்ககூடிய அகவிலைப்படியை கொடுக்க நிர்வாகம் கடமைப்பட்டுள்ளது.

**மறுவிசாரணை** - இல்லை.

Sd/-(Dr.P. Murugan)
Presiding Officer,
Labour Court, Salem.